இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 19 | திகதி : 10.12.2023 | விலை : 50.00

## உலகத் தமிழர் பேரவை–சர்வமதக்குழு யாழ் ஆயருடன் சந்திப்பு



இலங்கைத் தீவில் இனப்பிரச்சனைக்கான தீர்வை அடிமட்ட மக்களிடமிருந்து உருவாக்க வேண்டும். சமூக அக்கறைகொண்ட அனைவரும் இப்பணியை ஆற்ற முன்வர வேண்டுமென யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை உலகத்தமிழர் பேரவையும் சர்வமதக் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலகத்தமிழர் பேரவை சர்வமதக் குழுவினருடன் இணைந்து பல தரப்பினருடனும் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த 09ஆம் திகதி யாழ். ஆயர் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்டு யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்களைச் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகத் தங்களின் நிலைப்பாடுகள் பற்றிக் கலந்துரையாடினார்கள்.

இக்கலந்துரையாடலில் உலகத்தமிழர் பேரவையினர் **"ஒவ்வொரு தனி நபரும் சமாதானத்துடனும் கௌரவத் துடனும் நம்பிக்கையுடனும் எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை நாடு"** எனும் தலைப்பில் ஆறு கூற்றுக்கள் அடங்கிய மகஜர் ஒன்றினை ஆயர் அவர்களிடம் கையளித்தனர்.

இக்கலந்துரையாடலில் பல்சமயத் தலைவர்களுடன் உலகத்தமிழர்பேரவைத் தலைவர்களென 18 வரையான வர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய நிலையில் திருப்பாலத்துவ சபையின் 180ஆவது ஆண்டுவிழா



திருப்பாலத்துவ சபை ஆரம்பிக்கப்பட்டதன் 180ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 02ஆம் திகதி குருநாகல் மறைமாவட்டத்திலுள்ள கட்டுமான புனித அன்னாள் திருத்தலத்தில் நடைபெற்றது.

திருத்தந்தையின் மறைபரப்புச் சபைகளின் தேசிய இயக்குநர் அருட்தந்தை பசில் றொகான் பெர்னான்டோ அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நற்கருணை வழி பாடும் சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் மல்கம் கருதினால் ரஞ்சித் ஆண்டகை பிரதம விருந்தினராகவும் திருத்தந்தையின் இலங்கைக்கான திருத்தூதுப் பிரதிநிதி பேரருட்தந்தை பிறாயன் உடைக்வே ஆண்டகை சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் மறைமாவட்ட ஆயர்கள், திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள், அங்கத்தவர்களென 6000 வரையா னவர்கள் கலந்து கொண்டதுடன் யாழ். மறைமாவட்டதிலிருந்து திருப்பாலத்துவசபையின் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை S.A.றொஷான் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் 60ற்கும் மேற்பட்ட சிறார்களும் ஊக்குவிப்பாளர்களும் கலந்துகொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளிவிழா கடந்த 01.12.2023 கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்ததுடன், ஆசிரிய மாணவர்களுக்கு விசேட ஆசீர் வழங்கி ஒளிவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான பதக்கங்களைச் சூட்டியும் சான்றிதழ்களை வழங்கியும் கௌரவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் கே. ஜெ பிரட்லி கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பங்குத்தந்தை அருட்தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகளார் மற்றும் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி X.W.ஜேம்ஸ் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். ☛ 07

## புதுப்பொலிவுடன் தும்பளை புனித மரியன்னை ஆலயம்



பருத்தித்துறை தும்பளை புனித மரியன்னை ஆலயக் கட்டுமா னப்பணிகள் நிறைவடைத்த நிலையில் ஆலயப் புனிதப்படுத் தல் திருச்சடங்கும் வருடாந்தத் திருவிழாவும் கடந்த 08ஆம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை A.F. பெனற் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து ஆலயத்தை ஆசீர்வதித்துத் திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்ச கோதரிகள், பங்குமக்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## "அருளடையாளங்கள்" குருநகர் பங்கில் சிறப்புக் கண்காட்சி



குருநகர்ப் பங்கில் இவ்வருடம் உறுதிப் பூசுதல் பெறவுள்ள மாணவர்களால் "அருளடையாளங்கள்" எனும் கருப் பொருளில் முன்னெடுக்கப்பட்ட சிறப்புக் கண்காட்சி கடந்த 03ஆம் திகதி நடை பெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை A.J. யாவிஸ் அடிகளின் தலைமையில் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை றெனால்ட் அடிகளின் உதவியுடன் மறையாசிரியர்களின் ஏற்பாட்டில் நடை பெற்ற இக்கண்காட்சி நிகழ்வை காலி மறைமாவட்டத்திலிருந்து வருகைதந்துள்ள திருத் தொண்டர் சஜித் கிறிஸான் குணசேகர அவர்கள் ஆரம்பித்துவைத்தார்.

## வின்சென் டி போல் தேசிய சபையின் 50ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்



புனித வின்சென்டிப்போல் தேசிய சபையின் 50ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 03ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

புனித வின்சென்டிப் போல் சபையின் தேசிய ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை மக்ஸ்வெல் டி சில்வா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மறைமாவட்ட ஆன்ம ஆலோசகர்கள் சபையின் மத்தியசபைப் பிரதிநிதிகளென 100 வரையானவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ். மறைமாவட்டத்திலிருந்து ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நேசநாயகம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் மத்தியசபைத் தலைவி மற்றும் பந்திகளின் தலைவர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# எமது எண்ணம்

## இறைவேண்டுதல் ஆண்டு - 2024

நம் வாழ்வின் அர்த்தம் மற்றும் வாழும் முறை குறித்துக் கடவுள் காட்டும் வழிகளில் நல்ல தீர்மானங்கள் எடுக்கும் வழிமுறையாகிய தெளிந்து தேர்தலுக்கு மிகவும் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகிய இறைவேண்டல்பற்றிச்சிந்திப்போம்.

இவ்வார ஆசிரியர் தலையங்கத்தில் 2024 ஆம் ஆண்டை இறைவேண்டல் ஆண்டாக அனுஷ்டிக்கவுள்ள நாம், எமது அன்றாட வாழ்வில் செபவாழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவேண்டும்.

நாள் பூராகவும் ஓடி உழைக்கும் நாம் கிடைக்கும் ஓய்வு வேளைகளில் எமது சிந்தனைச் சிதறல்களைச் சமூக ஊடகங்களின் பயன்பாட்டில் செலவிடுகின்றோம்.

எம் வாழ்வின் இறைத்திட்டத்தை உய்த்துணர்ந்து இறைவழியில் வாழ செபவாழ்வு மட்டுமே வழிவகுக்கும் என்பதை உணராது வாழ்கின்றோம். இறைவனுடன் நாளாந்தம் தனிப்பட்ட முறையிலும் குடும்பமாகவும் கூடிச் செபிக்க வேண்டும் என்னும் மனநிலையைக் கட்டி எழுப்புவதே புத்தாண்டின் கருப்பொருளின் நோக்கமாகும்.

புனிதபவுலடியார்சொல்வதுபோல, நாம் என்ன செய்யவேண்டும் என்று அறிந்திருந்தாலும் எப்போதும் அவ்வாறு செய்வதில்லை.

இறைவேண்டல் என்பது, முற்றிலும் அறிவுபூர்வமாகச் செய்வது அல்ல. மாறாக அது இதயத்தையும், உணர்வுகளையும் ஈடுபடுத்துவதாகும். இறைவேண்டல் வழியாக, ஆண்டவரோடு உள்ள நம் உறவை ஆழப்படுத்துகிறோம். நம்பிக்கையில் வளர்கிறோம் மற்றும் அவரது திருவுளத்தைப் புரிந்துகொண்டு, அதை ஏற்கும்போது நமது உண்மையான மகிழ் வைக் கண்டுகொள்வதை உணரத் தொடங்குகிறோம்.

கடவுளின் திட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருப்பது, நம்மைக் கவலைக்கு அல்லது நிறைவுறாத மனநிலைக்கு உட்படுத்தும் என்ற அச்சம், ஆன்மீக வாழ்வில் வருகின்ற பெரிய சோதனைகளில் ஒன்றாகும். இத்தகைய வெற்று அச்சங்களை அகற்ற இறைவேண்டல் நமக்கு உதவுகிறது.

அத்தோடு இறைவேண்டல், சோதனைகள் மற்றும் துன்பங்கள் மத்தியிலும்ஓர்ஆழமானஆன்மீகமகிழ்ச்சியைக் கொணர்கிறது. இறைவேண்டலின் பயனாக, தெளிந்துதேர்தல், நம் மனங்களையும் இதயங்களையும் தெளிவடையச் செய்து, கடவுளின் இரக்கமுள்ள ஒளியை எளிதில் உணரக்கூடியவர்களாக நம்மை ஆக்குகிறது.

இறைவேண்டலில் ஆண்டவரோடு ஏற்படும் ஒருவித இயல்பான பிணைப்பால், ஒவ்வொரு நாளும் அவருக்கு நெருக்கமாகச் சென்று, நம் வாழ்வில் அவரது திருவுளத்தை முழுமையாக ஏற்கும் நிலைக்கு வருகிறோம். அந்த அவரது திருவுளத்தில் நம் அமைதி மற்றும் உண்மையான நிறைவைக் கண்டுகொள்கிறோம்.

மேலும் இறைவேண்டல் என்பது, கிளிப்பிள்ளைபோல சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வது அல்ல: மாறாக அது கடவுளோடு நட்புறவுகொண்டு, அவரில் நம்பிக்கை வைப்பதாகும்.

எனவே ஒரு நண்பர் மற்றொரு நண்பரிடம் பேசுவதுபோல், ஆண்டவரோடு நட்புறவில் வாழ அவரது அருளை இறைஞ்சுவோம். ஏதோ ஒன்றைக்கூறி மிரட்டுபவராக இல்லாமல், எல்லாவற்றுக்கும் மேலாக, அவரிடமிருந்து நாம் விலகிச் செல்லும்போதுகூட நம்மை ஒருபோதும் கைவிடாமல் இருக்கின்ற இயேசுவை, நமது மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரமாணிக்கமுள்ள நண்பராகப் பார்ப்பதற்குரிய அருளை அவரிடம் வேண்டுவோம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## மூத்த பொதுநிலைத் தொண்டர் தவம் சந்தியாப்பிள்ளை காலமானார்



மாதகல் திரு அவையைச் சேர்ந்த நில அளவையாளரான திரு தவம் சந்தியாப்பிள்ளை அவர்கள் 20.11.2023 அன்று காலமானார். இவர் யாழ். திரு அவையின் வளர்ச்சிக்காய் அர்ப்பணத்துடன் பணியாற்றிய ஓர் பொது-நிலை விசுவாசியாவார். புனித வின்சன்டி போல் சபை, பொதுநிலையினர் கழகம் என்பவற்றில் மறைமாவட்ட செயற்குழு உறுப்பினராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடுகளில் பங்கேற்று ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறி நெறிப்படுத்தியவர். இவர் ஆசிய ஆயர்கள் பேரவையின் இறையியல் மகாநாடுகளில் இலங்கை பொது நிலையினர் சார்பாக பங்கேற்றுள்ளார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிப் பல குருக்களை நெறிப் படுத்தியுள்ளார். பாதுகாவலன் பத்திரிகையில் பல ஆக்கங்களைப் படைத்துப் பாதுகாவலன் பத்திரிகையினை ஆர்வத்துடன் வாசிப்பதிலும், விநியோகிப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளார். திரு தவம் சந்தியாப்பிள்ளை அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம்.

## நற்கருணைப் பணியாளர்

### திரு. ஜோசப் எட்வேர்ட் இராசநாயகம் காலமானார்



யாழ். மறைமாவட்டத்தின் முதலாவது நற்கருணைப் பணியாளர் குழாமில் இணைந்து 20 வருடங்களுக்கு மேலாக நற்கருணைப் பணியாளராகப் பணியாற்றிவந்த திரு. ஜோசப் எட்வேட் ராசநாயகம் அவர்கள் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்திரு அவையை சேர்ந்த இவர் எடுத்துக்காட்டான ஒரு பொது நிலைப் பணியாளராகப் பணியாற்றி மறைமாவட்டத்திற்கும் பங்குத் திருஅவைக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். பாதுகாவலன் பத்திரிகையினை ஆர்வத்துடன் வாசிப்பதிலும், விநியோகிப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளார். யோசப் எட்வேட் இராசநாயகம் அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம்.

# இளவாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக எழுச்சி நாள்





இளவாலை மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழக எழுச்சிநாள் மற்றும் ஒளிவிழா நிகழ்வுகள் மறைக்கோட்டப் பொது நிலையினர்கழக ஆன்மீக இயக்குனர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அவர்களின் வழிகாட்டலில் 02 ஆம் திகதி சனிக்கிழமை பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை தியான இல்ல மண்டபத்தில் நடைபெற்றன. கழகத் தலைவர் திரு. கீர்தபொங்கலன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள் கழக மூத்த உறுப்பினர்களுக்கான கௌரவிப்புக்கள் என்பன இடம்பெற்றதுடன் பொதுநிலையினர் கழகத்தால் நடாத்தப்பட்ட பொது அறிவுப்போட்டி மற்றும் பசாம் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ், இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெயக்குமார், யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை சிரேஸ்ட விரி-வுரையாளர் அருட்தந்தை ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பண்டத்தரிப்பு திருக்குடும்பக் கன்னியர் மட அருட்சகோதரி பற்றிமா ஜெயந்தி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி ஓய்வு நிலை உபஅதிபர் திருமதி. சத்திவாணி, யாழ். மறைமாவட்டப் பொது நிலையினர்கழகத்தலைவர்திரு. ராஜ்குமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குப் பிரதிநிதிகளெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பரந்தன் புனித அந்தோனியார் ஆலய மறைப்பாடசாலை திறப்பு விழா



பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த ஞாயிறு மறைப்பாடசாலைக் கட்டடக் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அக்கட்டடத் திறப்பு விழா 05ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்துதலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து புதிய கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் பங்குமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# அருட்பணி மத்தாயஸ் அடிகள் நினைவாக இறுவட்டு வெளியீடு

ஆவணப்பேழை மூன்று முத்துக்களின் முன் மாதிரிகையான வாழ்க்கைப் பயணம் அடங்கிய இறுவட்டு வெளியீடு 14.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் அமைந்துள்ள மத்தாயஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தைச் சேர்ந்த ஜெயசிங்கரட்ணம் விதுஷாவின் முயற்சியில் உருவான ஆவணமே இவ் இறுவட்டில் வெளிவந்துள்ளன.

அருட்பணி ஜோண்சன் ராஜேஷ் மயூரன், செபமாலைத் தாசர் சபை அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில், பிரதம விருந்தினராக அருட்பணி ஜோசப் ஜோண் மௌலிஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக திரு. து.பிறட்லி வலயக்கல்விப் பணிப்பாளர் வலிகாமம் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி ஜேக்கப் நீக்லஸ் அடிகளாரும், J/63 பிரிவுக் கிராம சேவையாளர் திரு.அ.சர்வேஸ்வரனும், கலாசார உத்தியோகத்தர் திரு.இ.ஜோண்சன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். திருமறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் திரு.யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்கள் இறுவட்டிற்கு நயப்புரை வழங்கிச் சிறப்பித்தார்.

# போர்களும் வன்செயல்களும்



## - ஓர் உளவள நோக்கு

கரையூர்ச் செல்வம்

***முன்னுரை***

பல வருடங்களுக்கு முன்னர், ஆங்கில நாட்டுத் தொலைக்காட்சி - BBC, ஓர் ஆவணப்படத்தை (documentary) ஒளிபரப்பியிருந்தது. அந்த ஆவணப் படத்தொகுப்பின் தலைப்பு : " உலகில் மிகக் கொடுமையான மிருகம்" – the most ferocious animal in the world! சிங்கமா? புலியா? கரடியா? பாம்பா? முதலையா? யானையா? இல்லை, இல்வே இல்லை. அந்த மிருகம்: மனிதன் இன்று, உலகளாவிப் பார்க்கும் பொழுது மனுஷி என்றும் சொல்ல வேண்டி உள்ளது.

***தொடக்கம்***

பரிணாமத்தில் மனிதர் தோன்றிய காலந்தொட்டு மனிதர் சக மனிதர்களைக் கொன்று இருக்கிறார்கள். (tribal wars) தொடக்கத்தில் கற்களால் ஆயுதங்களைச் செய்தார்கள், பின்னர், இரும்பினால் செய்தார்கள், அதன்பின்னர் அம்பும் வில்லும் ஈட்டிகளுமாக மாறின. இதைத் தொடர்ந்து பீரங்கிகளும், குண்டுகளும், துப்பாக்கிகளுமென ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன. இன்று, தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொடிய போர்க்கருவிகளைப் பெருஞ்செலவில் பலம் வாய்ந்த நாடுகள் உருவாக்கி வருகின்றன. உருவாக்கிய இக் கொடிய ஆயுதங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இது, ஒரு கொடிய வணிகம். மனித கொல்லி வணிகம் நாகரீகத்தின் உச்சக் கட்டத்தில் வாழ்கிறோம் என்று தங்களைத் தாங்களே விழித்துக் கொண்டு, நடைமுறையில் அநாகரீகமாக நடந்து கொள்வது மட்டுமல்ல, அரக்கத்தனமாக நடந்து கொள்வது வெள்ளிடைமலை. இந்த "அரக்கத் தனம்" எங்கிருந்து வருகிறது? இந்த அரக்கத்தனம் வெறியாக மாறும் பொழுது, மனிதர் மிருகங்களாக மாறுகிறார்கள்! மிருகங்களாக மாறுகிறார்களா? – என்று எழுதும் பொழுது ஏதோ ஒன்று எனது மனத்தை உறுத்துகின்றது. இது, என்ன? மிருகங்கள் மனிதர்களைப் போல வெறிகொண்டு அலைவதில்லை. மனிதர்களைப் போல திட்டமிட்டு கூட இருக்கும் மிருகங்களை அழிப்பதில்லை. ஒரு மிருகக்கூட்டம் இன்னொரு மிருகக்கூட்டத்தையோ, மிருகங்களையோ திட்டமிட்டு சித்திரவதை செய்வதில்லை. அவ்வாறு செய்ததாக எந்தப் பதிவும் இல்லை.

**1977**

இதை எழுதிக் கொண்டிருக்கும் வேளை எனக்கு இரு விடயங்கள் ஞாபகம் வருகின்றன. முதலாவது 1977 ஆம் ஆண்டு ஒரு பாரிய இன அழிப்பின் தொடர்ச்சியாக, தென்னகத்தில் உள்ள தமிழர்களின் வீடுகள் சென்று - தமிழர்களைக் கொலை செய்தும், அவர்களுடைய வீடுகளையும் கடைகளையும் சூறையாடி, தமிழர்களையும் அவர்களுடைய வீடுகளையும் கடைகளையும் எரித்தார்கள், பௌத்த சிங்களக் காடையர்கள். அப்பொழுதிருந்த சில அமைச்சர்கள் இதில் நேரடித் தொடர்பு கொண்டு, காடையர்களைத் தூண்டிவித்து, அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து, அவர்கள் அத்தனை பேரையும் சட்டத்தில் இருந்து பாதுகாத்தார்கள். சிங்கள இராணுவமும் காவல்துறையினரும் இக்காடையர்களுக்குப் பக்கபலமாக இருந்தார்கள். இந்தக் கொடுமையான நிகழ்வுகளைப் பார்த்த அப்பொழுதிருந்த கொழும்பு மறைமாவட்டப் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்கள் தனது கைப்பட எழுதிய ஓர் உரையைப் பொறளையில் உள்ள ஜோ நெத் கலையகத்தில் ஒலிப்பதிவு செய்து, அன்றே அந்த உரை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப் பட்டது. இந்த உரையை தமிழில் ஒலிப் பதிவு செய்து, இலங்கை வானொலிக்கு எடுத்துச் சென்று, உரியவர்களிடம் கொடுத்தது இக்கட்டுரையாளர்.

அந்த உரையின் முதல் வரி :

"ஒரு மிருகக்கூட்டம் திட்டமிட்டு இன்னொரு மிருகக்கூட்டத்தை அழித்து ஒழித்ததாக உலக வரலாற்றில் பதிவு இல்லை." கடுமையான, உறுதியான, உண்மையான சொற்கள். அவர் உரையாற்றும் பொழுது அவரின் குரல் ஒலியை முகபாவனைகளை நான் நனகே அவதானித்தேன். இன்மும் ஞாபகம். அவரிடம் ஒரு கோவமோ, வெறுப்போ, சலிப்போ தென்பட்டதாகத் தெரியவில்லை. நிதானத்தோடு, தனது பதவிக்குரிய பொறுப்போடு ஒலிப்பதிவு செய்ததாகவே எனக்குத் தோன்றியது.

***சிங்களக் கத்தோலிக்க குருக்கள்***

ஒரு சில நாட்களிலேயே, இவ்வாறு பேராயர் தனது உரையை ஒலிபரப்பினார் என்று கேள்வியுற்ற அதே மறைமாவட்ட சிங்களக் கத்தோலிக்க மூத்த குருக்கள் சிலர், தமது குருத்துவத்தை மறந்து, கத்தோலிக்கத்தை மறுத்து சிங்கள இனத்துடன் தங்களை வெகுவாக அடையாளப்படுத்தி, கோபத்துடன் பேராயர் ஒலிபரப்பிய உரைக்காக அவரைக் கண்டித்து எச்சரிக்கையும் செய்தார்கள். எச்சரிக்கையில் ஒரு வசனம்: " கொழும்பு மறைமாவட்ட பேராயராக இருப்பதனால், இவ்வகையான செய்திகள் சொல்லக்கூடாது. சிங்களக் கத்தோலிக்கரின் குரலாகவே உமது குரல் ஒலிக்க வேண்டும்." இதன் பின்னர், பேராயர் குத்துக்கரணம் போட்டு வேறோர் செய்தி இவர்களது நடைமுறையை இவ்விடத்தே உளவள வழி நின்று பார்ப்போம். நான் ஏற்கனவே கூறியது போல, இவர்கள் சிங்களத்தோடு தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்கள். எவ்வாறு ஒரு குழந்தை தன்னைத் தனது தாயுடன் அடையாளப்படுத்தி, தன்னையும் தனது தாயையும் வேறு வேறாகப் பார்க்க முடியாமல் தனது தாயிடமிருந்து தன்னை தனியாக்க முடியாமல் ( not able to self - differentiate) தாயோடு ஒட்டி விடுகின்றதோ, அதே போன்று இவர்களும் தமது சிங்கள இனத்திடமிருந்து தனியாகாமல், சிங்களத்துடன் தம்மைப் பிணைத்துக் கொள்கிறார்கள். குழந்தை தனது குழந்தைப் பராயத்தில் தாயிடமிருந்து தன்னைத் தனியாக்குவதும், தாயுடன் இணைவதும் உடல்- உளவள வளர்ச்சியின் ஒரு பகுதியாகவே உளவள ஆய்வாளர்கள் இன்றும் பார்க்கிறார்கள். ஆனால், அதே போராட்டம் வளர்ந்தவர்களிட மிருக்கும் பொழுது, அதுவும் எவ்வித போராட்டமும் இன்றி இனத்தோடு அடையாளப்படுத்துவோரின் நிலையை Infantalism என்று உளவியளாளர் கூறுவர். Infant என்ற சொல் குழந்தையைக் குறிக்கும். Infantilism- குழந்தை, அந்தக் குழந்தை பராயத்தில் தனியாகி வாழமுடியாமல் போகும் பொழுது, வளர்ச்சி இன்றி ஒரு நிலையில் தங்கி விடுகின்றது. இந்த தக்கல் அக் குழந்தை உடல் ரீதியாக வளர்ந்தாலும், உளவள ரீதியாகக் குழந்தைத் தனத்தைக் (infantalism) காண்பிக்கும். இதை Fixation என்று உளவளத்தில் அழைப்பார்கள். fixation என்றால், மனித வளர்ச்சியில் ஒரு பருவத்தில் அசையாது உறைந்து விடுவது இதை, ஓர் உளவள வளர்ச்சிப் பிரச்சினையாகவே நாம் கருதுவோம். இதிலிருந்து மீளவில்லை யென்றால், வயதால் வளர்ந்தாலும், உடலால் வளர்ந்தாலும், ஏன் அறிவால் வளர்ந்தாலும் முன்னரே அசையாது உறைந்துவிட்ட நிலை மனிதரைப் பாதிக்கும். இந்த நிலையில் தான் தம்மை இனத்தோடு அடையாளப்படுத்துவோர் அந்த இனம் செய்யும் கொடுமைகளையும் வன் செயல்களையும் ஆதரிப்பார்கள், மறைப்பார்கள், நியாயப் படுத்துவார்கள். இந்த நியாயப்படுத்தலின் ஒரு வெளிப்பாடுதான்: "தற்பாதுகாப்புக்காக நாம் மற்றவர்களை அழிக்கிறோம்." என்று நியாயப்படுத்துவார்கள். இவர்கள் வன்செயலுக்கு ஒத்துப் போவார்கள். குற்றம் புரி-வது தவறெனில், அக்குற்றத்தை மறைப்பதும் தவறு. நீதிமன்றத்தில் இரண்டிற்கும் தண்டனை உண்டு. இவ்வளவு இடமெடுத்து இதை எழுதுவதற்குக் காரணமென்ன? நான் மேற்கூறிய நிகழ்வின் மூலம், சிங்களக் கத்தோலிக்கரைப் பற்றி எழுதியது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், நான் கூறியது அனைத்து அடையாளப்படுத்தல்களிலும் பொதுவாக உள்ளது. அதாவது, இனத் தோடு, மதத்தோடு, மொழியோடு, சாதியோடு, நாட்டோடு இந்த அடையாளப்படுத்தலைப் பொதுவாக நாம் பார்க்கின்றோம். இந்த அடையாளப்படுத்தல் ஒருவரை அல்லது பலரை, அல்லது ஒரு மந்தைப் போக்குக் கொண்டோரை ஆட்டிப்படைக்கும் பொழுது (obsession )அது வன்செயலுக்கு இடமளிக்கலாம். பல்வேறு இடங்களில் நாடுகளில் அவ்வாறு நடந்துள்ளது. சாதிக்காக, இனத்திற்காக மதத்திற்காக, மொழிக்காக, நாட்டிற்காக மற்றவர்களை கொன்று குவித்த இரத்தம் படிந்த வரலாறு உலக வரலாற்றை நிறைத்துள்ளது. மிருக வரலாற்றில் இதை காண முடியவில்லை.

மந்தைப்போக்கு என்றால் என்ன? சுய சிந்தனையின்றித் தனது தனித்துவத்தை பேணாமல் கும்பலோடு கும்பலாக "அரோகரா" போடும் போக்கு. கல்வியைத் தகவல் சேர்ப்பது போன்று கற்றவர்களும் இம்மந்தையில் சேர்வது மிகக் கவலைக்குரியது. இங்கு மனிதம் இல்லை. மனித வளர்ச்சி இல்லை.

***பற்று***

இங்கே ஓர் இயல்பான கேள்வி எழலாம். அதாவது, மொழிப்பற்று, இனப்பற்று, மதப்பற்று, நாட்டுப்பற்றுத் தவறா? இல்லை, பற்று வேறு வெறிவேறு. வெறிதான் கொலை செய்யத் தூண்டிவிடுகிறது. பற்று அல்ல "பற்று" என்ற சொல்லைத் தவிர்த்து, உளவள வழிநின்று நான் பயன்படுத்தும் சொல் "சேர்ந்துள்ளேன்" sense of belonging. இந்த சேர்ந்துள்ள உணர்வு என்னை எனது மதத்திலிருந்தோ, இனத்திலிருந்தோ விலகி, எனது மதத்தை, எனது இனத்தை வெளியே இருந்து, ஒரு மூன்றாவது ஆளாக நின்று எனது மதத்தையோ, இனத்தையோ, சாதியையோ பார்க்க கூடியதாக இருக்கும்.

இந்த "விலகல்" எனக்கும் எனது மதத்திற்கும் அல்லது இனத்திற்குமிடையே ஓர் இட எல்லையை (space) அல்லது பரப்பகலத்தை உருவாக்குகின்றது. இந்தப் பரப்பகலம் எனக்கோர் அக விடுதலையைத் தருகிறது. அந்த விடுதலையின் பலனாக எனது மதத்திலோ, இனத்திலோ உள்ள நன்மை தீமைகளைத் தெளிவாகப் பார்க்க உதவுகிறது. ஆகவே, நல்லதை ஏற்றுக் கொண்டு அதை வளர்க்கவும், தீமையை விமர்சித்து திருத்தவும் எனக்கு ஒரு சக்தியைத் தருகின்றது. உளப்பக்குவ வளர்ச்சி கொண்டவர்களால் இதைச் செய்ய முடியும். தொடர்ச்சியாகச் செய்ய வேண்டும். இங்கே நான் ஒரு சமூக மாற்ற முகவராக மாறுகின்றேன்.

ஓர் இறைவாக்கினராக வாழ முற்படுகின்றேன். இது, ஆரோக்கிய முடையது. தேவையானது இப்படி வாழ்வோரைப் பார்ப்பது அரிது. ஆனால், இல்லாமல் இல்லை. சில வாரங்களாக நடைபெற்ற இஸ்ராயேல் - ஹமாஸ் போரில் சிலர் இவ்வாறு முன்வந்து நீதிக்காக ஓங்கிக் குரல் கொடுத்ததை நாம் அவதானித்தோம். அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். மேலும் பற்று என்ற சொல் ஓர் இணைப்பை (attachment); குறிக்கக் கூடுமென்பதினால் அச் சொல்லை இங்கு தவிர்க்க விரும்புகின்றேன். எந்த ஒன்றோடு நான் என்னை இணைக்கின்றேனோ, அதிலிருந்து என்னை நானே தனியாக்கி, பற்றின்மையை (detachment) வளர்ப்பது மனித வளர்ச்சிக்கு அவசியம் அனைத்துப் பற்றுக்களிலும் இருந்து எம்மை வெறுமையாக்கிப் பயணிப்பது ஆன்மீக வழி என்பதையும் இவ்விடத்தே குறிப்பிடல் வேண்டும்.

முரணாக, என்னை என்னுடைய மதத்தோடு அல்லது இனத்தோடு நான் அடையாளப்படுத்தினால் நான்தான் என்மதம், நான்தான் எனது இனம் என்று மாறிவிடுகின்றது. அங்குதான் வெறித்தனம் தாண்டவமாடுகின்றது. போர்களுக்கும் வன் செயல்களுக்கும் பின்னால் இப்படிப்பட்ட ஒரு நிலைப் பாட்டைப் பார்க்க முடிகின்றது.

மதத்தையோ, இனத்தையோ, சாதியையோ, நாட்டையோ ஒரு புறப் பொருளாக்கி (object) அதை என்னுடைய முன்னுணர்வுக்குக் கொணர்ந்து, ஒரு கண்ணாடியில் பார்ப்பதுபோலப் பார்ப்போமானால், அடையாளப்படுத்தலில் இருந்து விடுபடலாம். நினைவாற்றல் தியானம் (mindfulnen meditation) பெரிதும் உதவும்.

***மிருகமாகலாம்***

1977 என்று நான் உப தலைப்பிட்டு இக்கட்டுரையை ஆரம்பித்த பொழுது இரு விடயங்கள் என்று குறிப்பிட்டேன். இப்பொழுது இரண்டாவது விடயத்துக்கு வருகிறேன். ஆயிரத்து தொளாயிரத்து 70 களின் முடிவிலும் 80களின் தொடக்கத்திலும்தமிழ் நாட்டு சார்ஸ் மணி இசைத்த ஒரு பாடல் ஞாபகம் வருகிறது. இப்பாடலை, அப்பொழுது " புதிய உலகம்" என்ற தலைப்பில் நான் பல தடவைகள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பிய ஞாபகம்.

"மனிதன் மிருகமாகலாம், தெய்வமும் ஆகலாம்." இன்று, இந்த வரியை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குரிய காரணங்களை மேலே எழுதியுள்ளேன். ஆகவே, அவ்வரியை மாற்றி, மனிதன் கொடியவனாகலாம், தெய்வீகமாகவும் மாறலாம். என்று உரைப்பது பொருத்தமானது என்று நினைக்கின்றேன். அரிஸ்டோட்டில் என்ற கிரேக்க தத்துவஞானி, மனிதனை ஒரு சமூகப் பிராணி (மிருகம்) என்று குறிப்பிட்டதாகச் சொல்லுவார்கள். இதையும் முழுமையாக இன்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை . பல தடவைகளில், இன்றும் இந்த மனிதர் பெரும்பாலும் சமூக விரோதிகளாகவே மாறுகிறார்கள். மற்றவர்களைக் கொடுமையாக அழிக்கிறார்கள். சமூக விரோதிகள் மன நோய்வாய்ப்பட்டவர்கள்.

(பார்க்கவும் மனநோய்க் களஞ்சியம் USMV)

(தொடரும்...)

# அருட்தந்தை எஸ்.ஜே. ராஜநாயகம் அடிகளார்
# அகவொளி மையத்தின் சுடரொளி



அகவொளி குடும்ப நல மையமானது மறை மாவட்டத்தின் குடும்பங்களுக்கான ஆன்மீக மைய மாக அமைந்திருக்கின்றது. முன் னாள் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் அவர்களுடைய தரிசனப் பார் வையில் உருவாக்கப்பட்டதே அக-வொளி குடும்ப நல மையமாகும். இந்தக் குடும்ப நல மையத்தினுடைய முதலாவது இயக்குநராக நீண்ட காலம் பணியாற்றியவர் மறைந்த நமது அன்புக்கும் பெரும் பாசத்துக் கும் உரிய அருட்தந்தை எஸ் ஜே ராஜநாயகம் அடிகளார். அவருடைய மறைவானது மறை மாவட்டத்திற்கு ஓர் பெரும் இழப்பாகும்.

அவர் தான் இந்த அகவொளி குடும்ப நலப் பணிக்கு அத்திவாரமிட்ட வர். சிறப்பாக தற்போது புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக் கின்ற இந்தக் குடும்ப நல மையத்தினு டைய அத்திவாரமாகவும், அது ஒரு பெரும் விருட்சமாக வருவதற்கு அடி நாதமாகவும் இருந்தவர் அருட்தந்தை எஸ்.ஜே ராஜநாயகம் அடிகளார். குறிப்பாக இந்தக் குடும்ப நல பணியை அவர் பொறுப்பெடுத்த பொழுது அவர் பாண்டியன் தாழ்வில் பங்குத் தந்தையாக இருந்தார். அங்கிருந்து இந்தக் குடும்ப நலப் பணியை ஆரம்பித்தார். குடும்பங்களுக்கான பணிகளை பங்கிலே தங்கியிருந்த வாறே ஆற்றியதுடன் அதற்கு பிற்பாடு தற்காலிகமாக பாங்சால் வீதியில் இருக்கும் பழைய மரியா கொட்டேல் என்கின்ற இடத்திலே தங்கியிருந்து இந்தக் குடும்ப நலப் பணியை மிக அழகான வகையில் செய்து வந்தார்.

அந்தக் காலத்திலே போரின் வடுக்களாலும் பல்வேறு பிரச்சினை களாலும் குடும்பங்கள் பல பாதிப்பு களை எதிர்கொண்டிருந்தன. குடும்பங்களை போர் சிதைத்துக் கொண்டிருந்த காலத்திலே இந்தக் குடும்ப நல மைய பணிகளின் மிகவும் ஆழமாகத் தேவையை உய்த்துணர்ந்த முன்னாள் ஆயர் மதிப்புக்குரிய தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை அவர்கள் பழைய பத்திரசியார் கல்லூரியின் கட்டடத்தை நம்முடைய தந்தை எஸ்.ஜே இராஜநாயகம் அடிகளாரி டம் ஒப்படைத்து யாழ் மறை மாவட் டத்தின் குடும்பங்களுடைய ஆன் மீகத்தை தாங்கக்கூடிய வகையில் பணியாற்றுமாறு பணித்தார். இதுவே இன்று யாழ்மறைமவாட்டத்தின் அக-வொளி என்கின்ற குடும்பநல மையம் என்கின்ற ஒரு பெரும் விருட்சமாகும்.

இந்த முக்கிய பணியைப் பொறுப்பெடுத்த கணத்தில் இருந்து மிகப்பெரும் உத்வேகத்துடனும் ஆன்மீகவாஞ்சையுடனும் தன்னு டைய பணிகளை அவர் இங்கிருந்து ஆற்றி இந்த அகவொளி மையத்துக்கு ஒரு புதிய முகவரியை பெற்றுத்தந்ததுடன், இன்று குடும்பங்களுக்கு ஓர் பெரும் ஆன்மீக ஊற்றாக வளர்ந்து கனி தருவதற்கும் அடித்தளமிட்டவர் தந்தை அவர்களே. இது வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவர் காலத்தில் எத்தனையோ ஆயிரம் குடும்பங்கள் இந்தக் குடும்ப நல மையத்துக்கு வந்து அவர்கள் ஆறுதலையும் தீர்வுகளையும் பெற்றுச் சென்றிருக்கின்றார்கள். நீண்ட காலமாக உளவளத் துணையாளர்கள் பலரை உருவாக்கி இருப்பது அவருடைய பெரும் சாதனையாகும். அவர்களுக்கான டிப்ளமோ பயிற்சி நெறியை ஆரம்பித்து அந்த உளவள டிப்ளமோ பயிற்சி நெறியின் ஊடாகப் பெருமளவிலான உளவளத் துணை யாளர்களை உருவாக்கி அவர்களைப் பல்

**"மகிழ்ந்திடாய் மாநிலமே - உந்தன்**
**மைந்தனின் மாட்சியிலே**
**பேரருள் பாய்ந்தது குருத்துவத்தால்**
**என்று முழங்கிடு திருஅவையே"**
**என்று ஒவ்வொரு குருப்பட்ட**
**நிகழ்விலும் பாடப்படும் பாடல்**
**இவரின் குருத்துவத்தால் மீண்டும்**
**ஒருமுறை அர்த்தமும் எழுச்சியும்**
**பெறுகின்றது.**
**குருத்துவம் என்பது**
**எவ்வளவு உயர்ந்தது,**
**ஒரு குரு எவ்வளவுக்கு ஆன்மீக**
**சமூகப் பணிகளை இந்த**
**உலகத்திலே ஆற்றலாம் என்பதற்கு**
**இவரின் வாழ்வு ஒரு சாட்சி.**

வேறு பங்குகளுக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பி அவர்கள் ஊடாக போரின் வடுக் கள், காயங்கள் குடும்பங்களில் இருந்தும் மனித மனங்களில் இருந்தும் ஆறுவதற்கு பெரும் துணையாளராக இருந்து வந்துள்ளார்.

இன்னும் குறிப்பாக அவரு-டைய கனிவான பேச்சு, அமைதியான குணம், அவருடைய தாழ்ச்சி, எளிமை, அர்ப்பணிப்பு என்கின்ற குருத்துவத்தினுடைய முத்துக்கள் அவ ருடைய பணி வாழ்வுக்குப் பெரும் பெரும் சிகரமாக அமைந்துள்ளன. எவரையுமே புண்படுத்தாத, எவரைப் பற்றியும் சற்றுமே எதிர்மறையாக பேசாத இவர் எப்பொழுதும் தன்னுடைய பணியே தன்னுடைய இலக்கு என்கின்ற இறைவாஞ்சையோடு இறையாட்சிப் பணியை உலகத்திலே நிறுவ வேண்டும் என்கின்ற ஆசையோடு செயற்பட்டவர்.

அவருடைய மறைவைக் கேட்டு அவர் உருவாக்கிய குடும்பங்கள் அதிர்ந் தன, அவர் உருவாக்கிய உளவளத் துணை யாளர்கள் அதிர்ந்தனர், அவர் மூலம் வாழ்வு பெற்ற மாணவர்கள் கலங்கினர். அவர்கள் சமூக வலைத்தளங்களில் இட்ட பதிவுகள் மிக மிக அழகானவை. இவை அனைத்தும் அவருடைய ஆளுமையை யும் அவரின் இருப்பியலின் பெறுமதியை யும் வெளிப்படுத்துவதாக அமைந்திருந்த தைக் காண முடிந்தது. "மகிழ்ந்திடாய் மாநிலமே உந்தன் மைந்தனின் மாட்சி யிலே பேரருள் பாய்ந்தது குருத்துவத்தால் என்று முழங்கிடு திருஅவையே" என்று ஒவ்வொரு குருப்பட்ட நிகழ்விலும் பாடப் படும் பாடல் இவரின் குருத்துவத்தால் மீண்டும் ஒருமுறை அர்த்தமும் எழுச்சி யும் பெறுகின்றது. குருத்துவம் என்பது எவ்வளவு உயர்ந்தது, ஒரு குரு எவ்வள வுக்கு ஆன்மீக சமூகப் பணிகளை இந்த உலகத்திலே ஆற்றலாம் என்பதற்கு இவரின் வாழ்வு ஒரு சாட்சி. ஒரு குரு ஒரு மனித வாழ்வின் திசையை மாற்றக் கூடிய சக்தி கொண்ட மிகப் பெரும் வல் லமை உள்ள ஆயுதம் என்கின்ற உண்மை அவரது வாழ்வியலின் ஊடாக வெளிப்படு கின்றது.

ஆகவே தான் இந்த மறைவு

அருட்பணி யோ.யோ.மவுலிஸ்

மறைமாவட்டத்திற்கும் குறிப்பாக அக-வொளி மையத்திற்கு பெரும் இழப்பாகும். பெரும் ஞான பொக்கிசத்தை, ஒரு சிறந்த முன்மாதிரியான குருவை எங்கள் மறை மாவட்டம் இழந்திருக்கிறது. எத்தனையோ குடும்பங்களுக்கு உளவள துணையை கொடுத்து அவர்களுக்கு நல்லறிவையும் நல் வழிகாட்டுதல்களையும் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு திசை காட்டியை இந்த மறை மாவட்டம் இழந்திருக்கிறது.

குறிப்பாக இந்த அகவொளி மையத்தினுடைய மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் அவருடைய கை வண்ணங்கள் காணப்படுகின்றன. சிறப்பாக 2014 ஆம் ஆண்டு இந்த அகவொளி மையத்துக்கு 12 அறை-களைக் கொண்ட ஒரு சிறந்த புதிய கட்டிடத்தை அமைத்தது அவருடைய அந்த நிர்வாகத் திறமையினுடைய வெளிப்பாடாக இருக்கின்றது. எந்தெந்த வளங்களை எல்லாம் இந்த அகவொளி மையத்திற்குக் கொண்டுவர முடியுமோ அத்தனை வளங்களையும் கொண்டு வந்து சேர்த்த பெருமை அவருக்கு உண்டு. குறிப்பாக அயர்லாந்து பல்கலைக்கழகத்துடன் டிப்ளோமாப் பயிற்சி நெறியை இணைத்து எத்தனையோ மாணவர்களை டிப்ளோமா சான்றிதழை வழங்கி வைத்தது அவருடைய பெருமை யாகும். அவருடைய காலம் அகவொளி மையத்துக்கு பொற்காலம். அவரின் பணிகளுக்கு அகவொளி நிலையம் என்றும் கடமைப்பட்டுள்ளது. வரு கின்ற ஆண்டு அவரை அகவொளி மையத்திற்கு அழைத்து அவரின் குருத்துவ அபிசேகத்தின் பொன் விழா வைக் கொண்டாட விரும்பினோம். தந்தையும் எம் எண்ணத்தையும் அழைப்பினையும் ஆமோதித்தார். ஆனால் கடவுளின் திட்டம் வேறாக இருந்துள்ளது.

அவருடைய விண்ணகப் பிறப்பின் புள்ளியில் பாதுகா-வலன் பத்திரிகையின் ஒவ்வொரு இதழி லும் குடும்பத்தைப் பற்றிக் கட்டுரைகளை வரைய அவரின் இதயத்திற்கு மிக நெருக்கமான அக-வொளி மையம் ஆரம்பிக்கின்றது. இதுவே அருட்தந்தை எஸ்.ஜே. ராஜ நாயகம் அடிகளாருக்கு அகவொளி மையம் செய்கின்ற மரியாதையாகும். அவருடைய நினைவாக இந்தப் பகு தியை பாதுகாவலன் பத்திரிகையின் ஒவ்வொரு இதழிலும் குடும்பத்தினு டைய பண்புகள, குடும்ப ஆன்மீகத் தின் முக்கியத்துவம். குடும்பங்கள் சந்திக்கின்ற சவால்கள் எவ்வாறு குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்பதைப் பற்றிய ஆக்கங்களை வெளிக்கொணரவுள்ளோம். தந்தையின் தியாகத்திற்கு நாங்கள் தலை வணங்குகிறோம். அவருடைய எளிமை, அர்ப்பணம், தாழ்ச்சி என் கின்ற புண்ணியங்களை நாங்களும் கற்றுக் கொண்டு குறிப்பாக அவர் வறண்ட பாருக்கு நீர் தெளிக்க வந்த பெருவிருட்சமாக இருக்கின்றார். இந்தக் காய்ந்திடும் பாருக்கு நீர் தெளிக்க இறைவன் அனுப்பி ஓர் நீர்தடாகம். மிகவும் சிக்கல்களுக்கும் துன்பங்களுக்கு உள்ளான குடும்பங்க ளுக்கு அவர் பெரும் சுடராக இருந்திருக்கின்றார். அந்தச் சுடரை நன்றியோடு நினைந்து இந்தப் பாதுகாவலன் சஞ்சிகையில் தொடர் ஆக்கங்ளை வரைவதின் மூலமாக நன்றிகளைச் செலுத்துகின்றோம். இப்பகுதியில் தொடர்ந்து வரும் குடும்பங்கள் பற்றிய ஆக்கங்களை எழுத முனைகின்றோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடைய அன்பின் மகிழ்ச்சி என்கின்ற திருமடலை அறி முகம் செய்து திருத்தந்தை தருகின்ற முத்துக்களை இப்பகுதியில் தொடர்ந்து பதிய விரும்புகின்றோம்.

## விண்ணக வாழ்வை அளித்தருளும் இறைவா!

விண்ணக வாழ்வை அளித்தருளும் இறைவா
திராட்சையூர் இளவாலை யாகப்பர் பங்கினில்
நம்பிக்கை ஒழுக்கம் பண்புகள் நிறைந்தவராய்
கருவினிலே தேர்ந்தார் செபஸ்தியேசு இராஜநாயகத்தை
திருஅவைப் பணிக்கென இரண்டாம் குருவாய்
குருத்துவ இறையியல் மெய்யியல் கல்விதனை
இந்திய மண்ணிலே கற்றுத்திருத் தொண்டராகி
அருப்பணிக் குருவாக அருட்பொழிவும் பெற்று
அன்புப் பணிவாழ்வை அழகுடனே ஆரம்பித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி இயக்குநராய்
மறையறிவில் மக்களிடம் மறுமர்ச்சி ஏற்படுத்தினார்
மன்னார் உயிலங்குளத்தில் ஆலயம் அமைத்து
அம்மக்கள் மனம் நிறைந்த இறைபணி ஆற்றினார்
பொன்னரிய மறையுரைகள் களப்பணிகள் வழியாக
சென்ற இடமெல்லாம் சேவையால் மதிப்புற்றார்
மன்னார் மறைமாவட்ட இறைபணிக் காலத்தில்
மகத்தான பணிகளால் வரலாற்றுச் சிறப்புற்றார்

இல்லறம் இறையுறவில் தளைத்திட யாழ் மண்ணில்
'அகவொளி' குடும்பவள நிலையத்தை ஆரம்பித்த ஆயர்
பல்வகை ஆளுமைகொண்ட இராஜநாயகம் அடிகளை
முதல் இயக்குநராய் நியமித்தார் பணிகள் சிறந்தன
பல்கலைக் கழகமாணவர்க்கு ஆன்மீக இயக்குநராய்
மாணவர் மனங்களிலே நீங்கா இடம்பிடித்தார்
நல்லதோர் பந்தயத்தில் இறைவனுக்காய் ஓடிமுடித்தார்
வல்ல இறைவன் வான்வீட்டுக்கு அழைத்துக்கொண்டான்
நல்வாழ்வின் பரிசான விண்ணகவாழ்வை அளித்தருளும் இறைவா!

அப்ராஜன் அன்ரனிப்ஜ்

# அகவொளியின் அத்திவாரம் அருட்பணி எஸ்.ஜே.ராஜநாயகம்

மறைமாவட்டக் குருக்களால் "ராஜா" என்று அன்போடு அழைக்கப்பட்ட எமது மறைமாவட்ட மூத்த அருட்பணியாளர் அருட்பணி செபஸ்ரி யேசு ராஜநாயகம் அடிகளாரின் மரணம் மறைமாவட்டத்திற்கு ஓர் பேரிழப்பாகும்.

அமைதியான சுபாவம், தாழ்ச்சி நிறைந்த பணி, அர்ப்பணிப்புள்ள சேவை, மற்றவர்களைப் புண்படுத்தாத உறவாடல், நேர்த்தியான திட்டமிடல் போன்றன அவரிலே நாம் கண்ட குருத்துவப் பண்புகள் ஆகும். பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடின்றி மதிப்போடு தொடர்பாடல்களை ஏற்படுத்திக் குருக்களிற்கு நல்ல ஆலோசகராகவும் செயற்பட்டவர்.

மன்னார் மறைமாவட்டம், யாழ் மறை மாவட்டத்தை உள்ளடக்கியதாகவிருந்த காலத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் உயிலங்குளம் பங்கில் பணியாற்றி மன்னார் மறைமாவட்டத்தின் உதயத்திற்கு வழிகோலியவர்களில் ஒருவரென்று கூறலாம். யாழ் மறைமாவட்டத்தின் கிளிநொச்சி, மாங்குளம், பாண்டியன்தாழ்வு, திருநெல்வேலி போன்ற பங்குகளிலும் அகவொளி குடும்ப வளநிலையத்தின் இயக்குநராகவும் யாழ் பல்கலைக்கழக நல்லாயன் ஆலயத்தின் ஆன்மீகக் குருவாகவுமிருந்து நிறைந்த பணிகளை அர்ப்பணிப்போடு செய்த பணியாளன்.

ராஜா அடிகள் மாங்குளம் பங்கின் பங்குத் தந்தையாக இருந்தபோது 1984ம் ஆண்டு பணி அனுபவம் பெறுவதற்காக அருட்சகோதரனாக நான் அனுப்பப்பட்டேன். போரின் கெடுபிடிகள் அடிப்படை வசதிகளில்லாத சூழ்நிலையில் இறைபணியிலும் மக்களுக்குப் பணி செய்வதிலும் இவருக்கிருந்த ஆர்வம் என்னைக் கவர்ந்தது. மிகுந்த அன்போடு அக்கறையோடு என்னை வழிநடத்தினார்.

1983ம் ஆண்டு இனக்கலவரங்களால் இடம்பெயர்ந்து மாங்குளம் பகுதியிலிருந்தவர்களுக்குக் குடியேற்ற வீடுகளை அமைத்துக் கொடுப்பதை நான் கண்டேன். வவுனிக்குளம் குளக்கட்டில் தூய வேளாங்கண்ணி அன்னைக்கென்று ஓர் அழகான ஆலயமொன்றை அமைத்தார். அதன் திறப்புவிழாவில் நானும் கலந்து கொண்டேன். 1993ம் ஆண்டளவில் மாங்குளத்தில் பாதுகாப்பாகவிருக்கமுடியாத சூழலில் வவுனிக்குளம் ஓர் பங்காக உருவெடுத்த போது நான் வவுனிக்குளம் பங்குத்தந்தையாக அங்கிருந்து பணியாற்றினேன். அவருடைய தீர்க்கதரிசனம் நிறைந்த பணிகளை



நேரில் கண்டு பாராட்டியிருக்கின்றேன். குடியேற்ற வீடுகள் அமைந்த இடம் கத்தோலிக்க கிறிஸ்தவ கிராமங்களாக மாறின. இது அவரது திட்டமிட்ட தீர்க்கதரிசனம் நிறைந்த பார்வையை வெளிப்படுத்துகின்றது. இன்று யாழ் மறைமாவட்டக் கல்வாரித்தலமானது வவுனிக்குளப் பங்கையொட்டி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அருட்பணி ராஜநாயகம் அடிகளாரின் குடும்ப மேய்ப்புப்பணி அனைவராலும் மிகுந்த பாராட்டைப் பெற்ற பணியாக அமைகின்றது. உயர்கல்வியை முடித்துக்கொண்டு நாடுதிரும்பிய போது இப் பொறுப்பான பணி இவருக்கு வழங்கப்பட்டது. அகவொளி குடும்ப உளவள நிலையம் அமைத்துப் பல குடும்பம் சார்ந்த பணிகளை முன்னெடுத்தார்.

முறையாகத் திட்டமிட்டுக் குடும்ப நலப்பணிகளை மேற்கொண்டார். குடும்ப ஆலோசனைகளையும் குடும்ப ஆன்மீக வலுவூட்டல் ஆலோசனைகளையும் ஏனைய மறைமாவட்டங்கள் வியந்து போற்றுகின்ற அரிய செயற்திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்றதை நாம் கண்டிருக்கின்றோம். ராஜாவினுடைய அயராத முயற்சியினால் அயர்லாந்திலுள்ள லுவென் பல்கலைக்கழகத்தின் உளவியல் கற்கைநெறியில் டிப்ளோமாப் பட்டத்தை இனமத வேறுபாடின்றி எமது யாழ் மறைமாவட்ட மக்கள் பெற்றுக் கொள்வதற்கு வழி வகுத்தது. அகவொளி குடும்ப நிலையம் பல சமய மக்களையும் ஈர்க்கின்ற நிலையமாக விளங்குகின்றது.

யாழ் பல்பலைக்கழக நல்லாயன் சிற்றாலய ஆன்மீகக் குருவாகப் பணியாற்றிப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மற்றும் ஆன்மீக நலன்கருதித் திட்டமிட்டுச் சிறப்பான பணிகளை முன்னெடுத்தார். இயலாமை காரணமாக இளைப்பாறுகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டாலும் பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு இளம் குருக்களை உற்சாகப்படுத்தி ஒப்புரவு அருட்சாதனம் வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்தார்.

எமது மக்களின் நல் வாழ்வுக்காக இறையன்பில் தன்னைக் கரைத்து உன்னதமான பணிகள் செய்ய எமது அன்பிற்குரிய "ராஜா" சீரியதொரு பந்தயத்தில் ஓடி ஓட்டத்தை முடித்து இறைவன் தருகின்ற இரக்கத்தின் கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியுள்ளவராக நிற்கின்றார். நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே உம் தலைவனின் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும் என்று இறைவன் இவரை அழைத்து நித்திய வான்வீட்டில் இடம் கொடுப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

"நித்திய இளைபாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே"

**அருட்பணி. எம்.டேவிட்**



# மரியாளும் பெண்தெய்வ வழிபாடும்



**அருட்பணி. அமிர்த யெயசேகரம்**

பூர்வீக மறை நம்பிக்கைகளில் பெண் தெய்வ வழிபாடு, குறிப்பாக ஆசிய. ஐரோப்பிய நாடுகளில் பரந்து இருந்தது. ஜப்பானில் குவான் ஜின் என்ற ஜப்பானியப் பெண் இரக்கத்தின் உருவமாகவும், சீனாவிலும் க்குஆனின் என்ற சீனப் பெண் தன்னை மற்றவர்களுக்கு அர்ப்பணிக்கும் உருவமாகவும் சித்தரிக்கப்பட்டு வழிபாடுகள் தங்கள் சூழலுக்கு ஏற்ற விதமாகச் செய்யப்படுவதை அவதானிக்கலாம். அதேவிதமாக இந்து மறையிலும் பெண் தெய்வமான மாரியம்மா மிக முக்கியமாக முதன்மையான இறை சக்தியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிபாட்டுத் தன்மை பெற்றுள்ளது.

இந்துக்கள் மரியாளின் உருவத்தில் தமது தெய்வமாகிய மாரியம்மாவைக் காணும் முறைகளும் உண்டு. ஐரோப்பாவில் கிறிஸ்துவிற்கு முன் கறுப்புத் தேவதைக்கு தெய்வ வழிபாடு இருந்து வந்தது. பின்னர் கத்தோலிக்கம் கருப்பு மரியன்னை (Black Madona) என்ற பெயருடன் தழுவி அமைத்துள்ளது., போலந்திலும், தமிழர்கள் யாத்திரை மேற்கொள்ளும் சுவிற்சர்லாந்து அயின்சீடல்ன் (Einsiedeln) இலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

"மோரெனத்தா" என்று அழைக்கப்படும் கருப்பு நிறக் கன்னி மரியாளை அனைத்துப் படைப்புகளின் அரசி என்று திருத்தந்தை கூறுகிறார்.

இஸ்லாமிய சமய நூலாகிய குரானில் ஒரே ஒரு பெண்ணின் பெயர் மரியாள் (மீரியாம்) என்று பொறிக்கப்பட்டுள்ளது. அவள் இறை வாக்கினாரான யேசுவாவின் தாய் என்றும், தூய ஆவியால் கருத்தரித்தாள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மறு கிறிஸ்தவ அவைகள் விவிலியப் பின்னணியில் மரியாள் ஏற்றுக்கொள்ளப்படுவதைக் காணலாம். அன்னை மரியாளின் யாத்திரைகளில் பெரும் எண்ணிக்கையாக இந்துக்கள், பௌத்தர்கள் பங்குபற்றுவதும்காணக்கூடியதாகஇருக்கிறது பெண் தெய்வ வழிபாட்டில், பெண் உருவகங்களுக்கு இடம்பெறும் வழிபாட்டு முறைகளும், மரியன்னை பக்தி முயற்சிகளுக்கும், வழிபாடுகளுக்கும் சமாந்தரமான ஒற்றுமை உண்டு என்பது பல அறிஞர்களின் கருத்து.

இது தொடக்கக் காலத்தில் காலம் காலமாக நிலை கொண்டிருந்து, பெண்களின் போராட்ட வாழ்வில் அடிமைத் தனத்தை எடுத்துரைக்கிறது. மரியன்னை இவைகள் அனைத்திற்கும் ஒரு சிறந்த எதிர்நோக்கும், நம்பிக்கை சின்னமுமாய் விளங்குகிறாள், மத்திய கால வரலாற்றில் மரியன்னை பக்தி அவளை தெய்வீக மயமாக்கிய அளவிற்கு உயர் பீடத்தில் வைத்து போற்றப்பட்டவளாகவும், ஏவாளின் வாழ்வில் பாவநிலையில் அமைச்சல் இல்லாதவளாக இருந்ததற்கு எதிர்மறையானவள் மரியாள் என்றும் காட்டப்பட்டது.

மீண்டும் மரியாள் மனித பெண்ணாக வெளிப்படுத்தப்படுகின்றாள். துறவற மடத் துறவிகள் மரியாளை முதன்மையாக அவளை கன்னியாகவும், பாலியலுக்கான எதிரான கருத்துக்களை திருஅவை ஒழுங்கு விதிகளுள் செதுக்கியுள்ளார்கள். "ஆனால் அவள் மக்களின் அன்னை. அவள் பூமித்தாய். அவளிடம் இயற்கையாகக் கருத்தரிக்கும் சக்தி மறைபொருளாக மறைந்து உள்ளது. இவள் ஒரு பெண் தான். இறைவன் வல்லமையால் கருத்தரித்தாள். இவள் தான் மகப்பேற்றின் பொழுது உதவுகிறவள். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலைக் கொடுக்கிறவள்." என்று றோசலின் என்ற பெண்ணிய விடுதலை ஆய்வாளர் மொழிகிறார்.

பெண்ணிய விடுதலையை எதிர்நோக்கும் சாதாரண மக்கள், அதிகமாக பெண்கள் அவளை நாடிப் போகிறார்கள். அவள் ஒரு பூமித்தாய். பெண்களின் வாழ்க்கை போராட்டத்தில் வாதைகள், அடிமைத்தனம், மகப்பேற்று அனுபவங்கள் குடும்பு - சமூகம்சார் அடக்குமுறைகளும் விடிவு பெற அவளைத் தேடுவதும், மரியாளின் பக்தி முயற்சி ஊடாக இவைகள் உடைபட ஊக்கியாக அமைகிறது.

இலட்சக்கணக்கானவர்கள் அவளுடைய ஆலயங்களுக்கு யாத்திரை செல்வதும் வழக்கமாகிவிட்டது. மரியாளின் பக்தி முயற்சிகள், பெண்களுடைய போராட்ட வாழ்வில் இருந்து பிரிக்க முடியாதது. கருத்தற்ற வெறும் சடங்காகத்தான் இருக்கும். மரியாளுடைய விடுதலைக் கீதம், அவளது பெண்ணிய விடுதலை எண்ணங்களையும், இயேசுவின் சிலுவையடியில் தனியாக நின்ற போராட்டத்தின் மத்தியில் அவளுக்கு இருந்த துணிவும், பல விதங்களில் வாதைகளை அனுபவிக்கும் அனைத்து ஏழைப் பெண்களுக்கு முன்னுதாரணம்.

## அன்பும் நீதியும்

அன்பும், நீதியும் சமூகத்தின் உயிர் மூச்சுப் போன்றவை. இரண்டும் சம அளவில் இருந்தால் மட்டும் சமூகம் தடம் பிறழாமல் சீராகச் செல்லும். ஆனால் இரண்டையும் இணக்கமாகக் கொண்டு செல்வது மிகப்பெரிய சவால். சிசிலி நாட்டின் அரசர் ஒரு கட்டளை பிறப்பித்தார். அந்தக் கட்டளையை மீறுவோர் இரு கண்களையும் இழக்க வேண்டும். துரதிஷ்டமாக அந்த நாட்டின் இளவரசன் கட்டளையை மீறிவிட்டான். தந்தையான அரசனுக்கு மிகப்பெரிய சோதனை. அன்பா? நீதியா? இறுதியில் ஒரு முடிவுக்கு வந்த அரசன் தன் ஒரு கண்ணையும், மகனின் ஒரு கண்ணையும் பிடுங்கித் தண்டனையை 50 : 50 என்று நிறைவேற்றினான்.

அன்பும், நீதியும் ஒரேநேரத்தில் வெற்றி பெற்றன. அன்பையும், நீதியையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்பவர்களே இன்றைய சமூகத்திற்கு அவசியமானவர்கள்.

*நன்றி : இந்த நாள் இனிய நாள்*



# செபமாலையின் வீரர்கள்

## ஒரு ஆன்மீக ஆயுதத்தின் வரலாறும் அதன் வீரர்களும்

08

**Champions of the Rosary - The History and Heroes of a Spritual Weapon**
**by Donald H. Calloway MIC (Marian Fathers of the Immaculate Conception)**
**(–தமிழில் – அருட்பணி.எஸ்.வி.பி. மங்களராஜா) டொனால்ட் எச். கலோவே**
MIC (Marian Fathers of the Immaculate Conception)
அமல உற்பவ மரியாளின் குருக்கள் துறவறசபை

**முயுறே நகரப்போர்**
(The Battle of Muret)

(29.10.2023 இன் தொடர்ச்சி)

இந்தக்கவிதை உருவகங்களைச் சித்தரிப்பதால் அடையாள முக்கியத்துவம் வாய்ந்தது. செபமாலை ஒரு ஆன்மீக ஆயுதமாகவும் அதேவேளையில் விண்ணக அரசிக்கு ஒரு றோஜா மலர்க் கிரீடமாகவும் அமைந்துள்ளது. இந்தக் கவிதையில் மூலப்பிரதி தற்போது ஒரு இடத்திலும் கிடைக்காது போனாலும் 1693ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு நூலில் இக்கவிதையின் பிரதியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இக் கவிதை மீண்டும் கண்டுபிடிக்கப்படுவற்குப்பல வருடங்களுக்கு முன்பே சாமிநாதர் சபையினரே முயுறேப்போரில் சாமிநாதரின் காத்திரமான பங்களிப்பை உறுதிப்படுத்தி வந்துள்ளனர்.

14ம் நூற்றாண்டில் இங்கிலாந்தைச்சேர்ந்த சாமிநாதர் சபையின் வரலாற்றாசிரியர் நீக்கிலஸ் ட்ரீவே (Nicholas Trivet) பின்வருமாறு குறிப்பிட்டார். புனித சாமிநாதர் செபத்தினால் போர் புரிந்தார்: டி மொன்போர்ட் ஆயுதங்களைக்கொண்டு போரிட்டார்.

முயுறே போருக்கு பின் புனித சாமிநாதரின் சீடர்கள் பலர் அல்பிஜென்சியர்களுக்கும். வேறு பல பேதகர்களுக்கும் எதிராக மரியாளின் திருப்புகழ் மாலையின் வல்லமையைப் பற்றி போதித்து தமது வீரம்செறிந்த போர்களாலும், சாட்சிய வாழ்வாலும் தொடர்ந்து போரிட்டு வந்தார்கள். சாமிநாதர் சபையைச் சேர்ந்த வெரோணா நகரத்து புனித இராயப்பர் ( St. Peter of Verona) மரியாளின் ஊழியக்காரர் சபையென்னும் (Servites) துறவற சபை உருவாக உதவியாக இருந்தவர். இவர் அல்லிஜென்சியர்களால் படுகொலை செய்யப்பட்டார் அல்பிஜென்சியர்கள் இவரது தலையின் மேல் பாதியைச்சீவி இவரைப்படுகொலை செய்த போது இவர் தமது கத்தோலிக்க மத நம்பிக்கைக்காகத்தம் இன்னுயிரை ஈந்த மறைசாட்சியானார்

செபமாலைக்குவ் சான்று பகர்ந்த சாமிநாதர் சபையைச் சேர்ந்த முதல் சாட்சிகளுள் ஒருவராகப் பல கலைப்படைப்புக்களில் வெரோணா நகரத்து புனித இராயப்பர் சித்தரிக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணத்திற்கு கரவாஜ்ஜியோ (Caravaggio) வின் செபமாலையின் அன்னை மரியாள் எனும் கலைப்படைப்பில் (பக்.361) இவர் சித்தரிக்கப்படுகின்றார். இப் படைப்பில் கன்னிமரியாளையும். குழந்தையேசுவையும் சுட்டிக் காட்டும் சாமிநாதர் சபைத்துறவியாக இவர் காண்பிக்கப்படுகிறார். திருப்பீடத்தின் மகிமைக்கு இவரை இட்டுச்சென்ற நெற்றியில் இவர் எதிர்கொண்ட காயத்தை இதில் அவதானிக்கலாம்.

**செபமாலைப் பக்திச்சபை**

அந்நாளை பாரம்பரியத்தின்படி செபமாலை சொல்லிச்செபிக்கும் பக்திமுயற்சியை வளர்த்தெடுக்க புனித சாமிநாதர் ஒரு செபக் குழுவையும்ஏற்படுத்தியிருந்தார். இந்தசெபக்குழுவானது இந்த ஆன்மீக ஆயுதத்தை வருங்கால தலைமுறையிரைுக்குக்கையளிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதில் அவதானிக்கப்பட வேண்டிய விடயமென்ன வெனில் இச்செபகுழுவின் வரலாறும் செபமாலையின் வரலாறும் பல அம்சங்களைப் பொதுவாககொண்டிருந்தன. காலப்போக்கில் செபமாலை என்ற வார்த்தைபிரபல்யமடைந்து வந்ததைப்போன்று புனித சாமிநாதரால் நிறுவப்பட்ட இந்த செபக் குழுவும் நாட்கள் செல்லச் செல்ல அனைத்துலகிலும் ‘செமாலை பக்திச்சபை’ யென வழங்கப்படலாயிற்று. ‘செபமாலை’ உருவாகிய முதல் சில நூற்றாண்டுகளில் உண்மையில் இச்சபை பல பெயர்களில் இயங்கிவந்தது. பல்வேறு காலப்பகுதிகளில் இச்சபை ‘செப பக்தியைச்சபை’, ‘செபமாலைப் பக்திச்சபை’, ‘செபமாலைத்தோழமைக்குழு’ என்ற பெயர்களால் மட்டுமல்ல ‘செபமாலைச்சங்கம்’ என்று முதலாக அழைக்கப்பட்டது. ஆக, எல்லாத் தலைப்புக்களையும், அவற்றின் பாவனையையும் பார்க்கும் போது இவற்றுள் மிகவும் பிரபல்யமாக நிலைத்து நின்ற தலைப்பாக ‘செபமாலைப்பக்திசபை’ நிலைத்து நின்றது. எனினும் என்னதான் பல்வேறு தலைப்புகள் பயன்பாட்டில் இருந்து வந்தாலும் புனித சாமிநாதர் தான் இவற்றின் நிறுவுநர் என்ற பெருமையைப் பெறுகின்றார். பல பாப்பரசர்களும் இந்த புனித சாமிநாதரின் மரவு வழியையே உறுதி செய்கின்றனர். 1495ம் ஆண்டு பாப்பரசர் 6ம் அலெக்சாண்டர் (1492-1503) வெளியிட்ட அறிக்கையொன்றுதான் பாப்பரசர் ஒருவர் மேற்படி உண்மையை உறுதிப்படுத்தும் மிகப் பழமை வாய்ந்த அறிக்கையாகும். ஆயினும் அநேகமாகப் புனித சாமிநாதர்தான் செபமாலைப்பக்தி சபையை நிறுவியவர் என்ற உண்மையை முதலில் ஏற்றுக்கொண்ட பாப்பரசர் என்று கூற முடியாது ஆயினும் இதுபற்றிய மிகவும் பழைமை வாய்ந்த கைவசம் உள்ள பாப்பரின் உறுதிபடுத்தல் ஆவணம் இவரதுதான். 1897ம் ஆண்டு பாப்பரசர் 13ம் சிங்கராயா (1878-1903) புனித சாமிநாதரால் நிறுவப்பட்ட இந்த செப பக்தி சபையின் பழமைத்தன்மை பற்றிப்பின் வரும் சுருக்கமானவிளக்கத்தைதருகின்றார்: “இதனுடைய (செபமாலைப் பக்திச்சபையுடைய) ஆரம்பத்தை நோக்குவோமேயானால் அது தனிச்சிறப்பு மிக்கதாயுள்ளது. ஏனெனில் புனித சாமிநாதர் அவர்களே இதன் நிறுவுநராகவுள்ளார்.”

புனித சாமிநாதர் குறைந்தது ஒரு பக்திசபையை தமது வாழ்நாளில் நிறுவியிருந்தார் என்பது வரலாற்று ஆதாரம் உண்டு அன்ரனி சேர்ஸ் (Antini Sers) என்பவருடைய இறுதி உயில் அல்லது விருப்பு ஆவணம் இதனைக் குறிக்கின்றது: சேர்ஸ்ஸினுடைய உயில் 1221 ம் ஆண்டு எழுதப்பட்டது. அதே வருடத்தில் தான் புனித சாமிநாதர் இறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி உயிலில் இஸ்பானியாவிள்ள பாலென்சியா எனும்மிடத்தில் சாமிநாதர் குஸ்மானினால் நிறுவப்பட்ட இப்பக்திச்சபையில் ஒரு உறுப்பினராக விருந்தார் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயிலில் இப்பக்திசபை எந்த வருடத்தில் நிறுவப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை ஆயினும் அதில் தெளிவாகக்குறிப்பிடப்பட்ட விடயமொன்று என்னவெனில் அவரது (சேர்ஸிடைய) இறப்பின் போது பாலென்சியா பக்திச்சகோதரர்கள் ஒன்றுசேர்ந்து அவரது ஆன்மாவிற்காக செபிக்கவேண்டுமென்பதாகும் அவர்களது இவ்விரக்கச்செயலுக்குப்பிரதிகாரணமாக செபவேளையில் பயன்படுத்தும் மெழுகுவார்த்திகளுக்குத் தேவையான மெழுகைக் கொள்ளனவு செய்வதற்காகவும் சேர்ஸ் அவர்கள் தமது உடமையிருந்துபக்திச்சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஏறக்குறைய 3.கிலோ கோதுமை, அத்துடன் சில உணவுப்பொருட்களும் சரிசமனாக வழங்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். புனித சாமிநாதர் 1218ம் ஸ்பானியாவில் உள்ள பாலன்சியாவில் இருந்தார்என்றஅடிப்படையில்இவ்வருடம் இப்பக்திசபையை அவர் அங்கு அநேகமாக நிறுவியிருக்கவேண்டும் எனலாம். எனினும் ஸ்பானியாவில் இந்தப்பக்திச் சபை தான் புனித சாமிநாதர் நிறுவிய முதல் பக்திச்சபையென்று நிறுதிட்டமாகக் கூறமுடியாது.

பல வரலாற்றாசியர்களுதும், திருத்தையர்களதும் கூற்றுபடி 1218ம் ஆண்டு புனித சாமிநாதர் ஸ்பானியாவில் ஒரு பக்திச்சபையை நிறுவதற்கு முன்னதாக ரோமாபுரியில் ஒரு பக்திச் சபையை நிறுவியிருந்தாா். பாப்பரசர் 8ம் கிளமேன்ற (1592-1605) 1601ம் ஆண்டு திகதியிடப்பட்ட திருத்தூது மடலொன்றில் ரோமாபுரியிலுள்ள புனித சிக்ஸ்துஸ்ஸின் ஆலயத்தில் புனித சாமிநாதரின் பிரசன்னத்தைப்பற்றிப் பின்வரும் குறிப்யொன்றைத்தருகின்றாா் “பின்னா் அதே துறவிகள் மடத்தில் (புனித சிக்ஸ்துஸ் மடம்) உள்ள ஆலயத்தில் புனித சாமிநாதர் கி.பி. 1216ம் ஆண்டில் பரிசுத்த கன்னி மரியாளின் செபமாலையைப் பிரகடனப்படுத்தினாா்.” ரோமாபுரியில் புனித சாமிநாதர் செபமாலையைப் பிரகடனப்படுத்தியமை தான் அநேகமாக திருச்செபமாலைப் பக்திச்சபையை ஏற்படுத்தியமையாகவும் இருக்கவேண்டும். ஆக செபிப்பதற்காக ஒன்றுசேரும் ஒரு சபையானது ஆரம்பிக்கப் படுவதற்கு ரோமாபுரியைவிட வேறு பொருத்தமான தொரு இடம் இருக்கமுடியுமா?

*(தொடரும்...)*

---



# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(றூபன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 2020 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து சர்வ தேச விசாரணை வேண்டுமென்று கூறிய கொழும்பு ஆயர் மல்கம் ரஞ்சித் அவர்கள் ஒருசில நாட்களிலேயே அது வேண்டாமெனத் தன் முடிவை மாற்றிக்கொண்டார். இதனை, “கருதினால் மல்கம் ரஞ்சித் ‘பல்டி’ அடித்தார்” என பத்திரிகைகளில் எழுதியிருந்தார்கள். உண்மையில் அவர் அப்படி ‘பல்டி’ அடித்தாரா?**

**ப**தில்: றூபன், ‘பல்டி’ அடிக்கின்ற வயதல்ல அவருடைய வயது, அதனால், ‘பல்டி’ அடித்திருக்கமாட்டார்! ஆனால், இப்போதெல்லாம் யார் தங்கள் வயதுக்கேற்ற வேலையைச் செய்கின்றார்கள்! தாறுமாறாகத்தானே எல்லோரும் நடந்துகொள்கின்றார்கள். அதனால், அவர் ‘பல்டி’ அடித்திருப்பதற்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றது என சிந்திக்கத் தோன்றுகின்றது.

*(சுடர், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கேள்விகளுக்கான பதில்களைக் கூறுகின்றபோது நீங்கள் வார்த்தைகளால் விளையாடுகின்றீர்களா என்று கேட்கவேண்டும் போல் இருக்கின்றது! உண்மையில் வார்த்தைகளால் விளையாடுகின்றீர்களா?**

**ப**: சுடர், நீங்கள் இப்படிச் சுடலாமா! எத்தனையோ பேர், எத்தனையோ விளையாட்டுக்களை எப்படியெப்படி எல்லாம் விளையாடும் போது நான் வார்த்தைகளினால் விளையாடினால் என்ன, சுடர்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: கேள்விகளுக்கான அதிகமான பதில்கள் நெற்றியடிப் பதில்களாக இருக்கின்ற னவே! அதற்குக் காரணம் என்ன?**

**ப**தில்: ஆனந்தன், நெற்றியில் அடித்தால் தானே ‘நெற்றிக்கண்’ திறக்கும்! அதனால் தான்!

*(ஜெயா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: தங்களுக்குப் படித்ததில் பிடித்தது பல இருக்கும். எனினும், தங்களுக்குப் படித்ததில் உறைத்ததொன்றையும், படித்ததில் சுவைத்ததொன்றையும் கூறமுடியுமா?**

**ப:** ஜெயா, முதலில் உறைப்பாக இருப்பது நன்றாக இருக்கும்! அதனால், உறைத்ததைத் தருகின்றேன்: ‘ஒரு துண்டுத் தேங்காயைத் திருடிய எலிக்கு விஷம் வைக்கக் கற்றுத் தந்த நம்முடைய மூளை, கோடிக்கணக்கில் திருடுபவனுக்கு ஓட்டுப் போடாதே எனக் கற்றக்கொடுக்க மறந்து விட்டது!’ என்ற மோஸ்லின் ஆ என்பவரின் கூற்றைக் கூறுவேன். இரண்டாவதாகச் சுவைத்ததைத் தருகின்றேன்: பல மணித்தியாலயங்கள் செலவுசெய்து கடைகளில் உடுப்புக்களை, குறிப்பாகச் சாறிகளைத் தெரிவு செய்யும்போது கடைக்காரரிடம் பெண்கள் கேட்கின்ற கேள்விகள் இரண்டு! ஒன்று, “இந்தக் கலர்ல வேற ‘டிசைன்’ இருக்கிறதா?” இரண்டு, “இந்த ‘டிசைன்’ல வேற கலர் இருக்கிறதா?” இவை இரண்டு கேள்விகளும் தான் புடவைக்கடையில் செலவிடும் நேரத்தைத் தீர்மானிக்கின்றன!

(சுதா, மன்னார்)

**கேள்வி: இஸ்ரயேல் கமாஸ் யுத்தம் மனிதாபிமானமில்லாமல் நடந்துகொண்டிருக்கின்றதே! மிகப்பெரும் அவலம் கண்முன்னே நடக்கின்றது. என்னாகும்?**

**ப:** சுதா, போர் என்று வந்தால் முதலில் மரணிப்பது உண்மை. தொடர்ந்து மரணிப்பது மனிதாபிமானம்! மிகவும் மோசமான இழிவான மிருகத்தனமான செயல்களே காசாவில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. நம் மண்ணில் நடந்ததை ஞாபகப்படுத்துகின்றது. இங்கு இருளில் நடந்தது. அங்கு வெளிச்சத்தில் நடக்கின்றது. அவ்வளவுதான்! துன்பமும் துயரமும் வலியும் வேதனையும் அவமானவும் நோவும் சாவும் எங்கும் ஒன்றுதான்!

*(ராணி, மன்னார்)*

**கேள்வி: இலங்கைப் பெண்களின் ஆயுட்காலம் 80ஆக அதிகரித்துள்ளதாக ஒரு தகவல். இத் தகவல் உண்மைதானா?**

**ப:** ராணி, நீங்கள் நீண்டகாலம் வாழ்வதற்கு ராஜாக்களாகிய நாங்கள் தியாகம் செய்யத்தானே வேண்டும்!

### கோப்பாய் ஆசிரியர்...

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*

கிறிஸ்தவமன்றக் காப்பாளர் விரிவுரையாளர் பிரபாலினிதனம்பிரதிஅதிபர் த. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர் நிகழ்வில் இனிய விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கலாநிதி சு பரமானந்தம் சிரேஷ்ட விரிவுரையாளர்களான திருமதி பப்சி மரியதாஸ், திருமதி எஸ். கெலன் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரியின் மாணவ ஆசிரியர்களும்கலந்துகொண்டனர். கலாசாலையின் அண்மைக்கால வரலாற்றில் முதன்முறையாக ஆயர் ஒருவர் கலாசாலைக்கு வருகை தந்தமை இதுவே முதல் தடவை ஆகும். கலாசாலைக்கு வருகை தந்த ஆயரைக் கலாசாலை சமூகத்தினர் தவில் நாதஸ்வர இசையுடன் வாயிலிலிருந்து மண்டபம் வரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஆயர் தனது வருகையின் போது கலாசாலையில்அமைந்துள்ள மரியன்னை சிற்றாலயத்தையும் தரிசித்தார். நிகழ்வில் சிறப்பு கௌரவமாக கலாசாலையில் கத்தோலிக்க சமய பாடத்தை திறம்படப் போதித்த விரிவுரையாளர் பா. பாலகுமார் ஆயரால் கௌரவிக்கப்பட்டார்.



## கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு

நத்தார் அலங்காரப் பொருட்கள், நத்தார் பரிசுப் பொருட்கள், நத்தார் மின்குமிழ்கள், நத்தார் மெழுகுவர்த்திகள், மோட்சபாதை, செபமாலைகள், திருப்படங்கள், செப நூல்கள் என்பன மலிவு விற்பனையில் உண்டு.

360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 222 9041


## விண்ணகப் பிறப்பின் 10ம் ஆண்டு நினைவு



பிறப்பு 17 . 01 . 1937 — இறப்பு 05 . 12 . 2013

அமரர்

**திரு சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ்**

**(இளைப்பாறிய இ.போ.ச அத்தியட்சர் (J.P))**

வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாட்களிலும் உமது
கோவில் முற்றங்களில் தங்கும் ஒருநாள் மேலானது.
(தி.பா 84:10)

நிறைவாழ்வை இவ்வுலகில் வாக்களித்த இறைவா!
உமது இல்லத்திலும் அப்பா இன்புற்றிருக்கச் செபிக்கிறோம்.
இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஆனையூர் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் 06.12.2023 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கும், குருநகர் கார்மேல் அன்னை ஆலயத்தில் 05.12.2023 செவ்வாய்கிழமை காலை 6.00 மணிக்கும் இரங்கற்திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

AD77

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 27 . 08 . 1946 — உதிர்வு 02 . 11 . 2023

அமரர்

**திருமதி அந்தோனி ஆரோக்கியம்**

**(றோக் அக்கா)**

"சீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

அன்பும் அமைதியும் நிறைந்தவளாய்
அகிலமதில் திகழ்ந்தவரே
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் - உம்
அன்பை நாம் மறவோம்.
இறைவனே உம்மை அழைத்தார்
அவரே அமைதி அளித்திடுவார்
இறைவனில் என்றும் இளைப்பாற
இனிதாய் நாமும் இறைஞ்சுகின்றோம்

புனித சூசையப்பர்கோவிலடி
புதுக்குடியிருப்பு

AD76

திருமதி T. யோசப்பின்நிற்ரா
குடும்பத்தினர்


## விற்பனைக்கு

புதிய வடிவமைப்பிலான இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட விவிலிய நாட்குறிப் போடுகள் விற்பனைக் குண்டு.

புனித வளன்
கத்தோலிக்க அச்சகம்
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


## நீங்கா நினைவுகளில் நாம்....


### 4ம் ஆண்டு நினைவு



மண்ணுலகில் 17 . 07 . 2010 — விண்ணுலகில் 19 . 11 . 2019

*அமரர் சி.பெஞ்சித் றஜாந்தி*

### 38ம் ஆண்டு நினைவு



பிறப்பு 18 . 03 . 1904 — இறப்பு 18 . 12 . 1985

*அமரர் மடுத்தீஸ் முத்தையா*

தலைவராகிய ஆண்டவரே!
என் கண்கள் உம்மை நோக்கி இருக்கின்றன
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்

AD75

*100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*

*நீங்காத நினைவுகளில்
குடும்பத்தினர்*

## 20ம் ஆண்டு நினைவுகள்



மண்ணில் 07 . 10 . 1948 — விண்ணில் 24 . 11 . 2003

அமரர்

**திரு எட்வேட் றீற்றா**

**(ராணி)**

**ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது
பார்வையில் மிக மதிப்புக்குரியது.
(தி.பா 116:15)**

வாச மலராய் இல்லறம் என்னும் அன்புக் கூட்டினுள் தாய் தந்தை சேய்கள் நேசங்கள் பரிமாற கடந்த பசுமையான நினைவுகள் நெஞ்சினில் அலை மோத அம்மா உன் அன்பு வதனம் ஓவியமாய் நிழலாடுதே! எம்முடன் நீ வாழ்ந்த காலம் நிலவாய்ப் பவனிவர இறைவன் அழைப்பேற்றுச் சென்ற ஆண்டுகள் இருபது கடந்திடினும் உம் நினைவுகள் தினம் தோன்றி இதயங்கள் உருகுதே! விண்ணக இறைவன் பாதத்தில் அர்ச்சனை மலராய் நின் ஆன்மா அமைதியில் இளைப்பாற வேண்டுகின்றோம்

"அன்னம்ஸ்"
ஓடக்கரை வீதி,
சங்கானை.

AD73

குடும்பத்தினர்

## 1ம் வருட நினைவுகளுடன்



வையகத்துள் 15 . 09 . 1937 — தெய்வகத்துள் 09 . 12 . 2022

அமரர்

**ஆசீர்வாதம் சுவானப்பிள்ளை**

**தம்மீது அன்பு கொள்வோருக்குக் கடவுள் வாக்களித்த
வாழ்வாகிய வெற்றிவாகையினை அவர்கள் பெறுவார்கள்
(யாக்கோபு 1:12)**

**ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
உம் நினைவுகள் எம் இதயத்திலிருந்து
என்றும் மறையாது அம்மா.......**

புனித யாகப்பர் வீதி,
இளவாலை

AD78

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## 10ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு 12 . 05 . 1946 — இறப்பு 15 . 12 . 2013

அமரர்

**சில்வெஸ்டர் பொன்சியானுஸ்**

**(பாக்கியராசா)**

**பிறந்தது :- குருநகர் - வாழ்ந்தது :- ஆனைக்கோட்டை**

**குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் 15.12.2023 (வெள்ளிக்கிழமை) காலை 5.30 மணிக்கும் மற்றும் ஆனைக்கோட்டை அடைக்கல மாதா ஆலயத்தில் காலை 6.15 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.**

தகவல்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

AD74

## புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியின் திருவிழா



கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் வருடாந்தத் திருவிழா கடந்த 04ஆம் திகதி கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அடிகளின் தலைமையில் இடம்பெற்றது.

திருநாள் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

இத்திருப்பலியில் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மறைமாவட்டங்களைச் சேர்ந்த குருக்கள், அருட்சகோதரிகள், குருமடமாணவர்கள், ஆசிரியர்கள் பணியாளர்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா



புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை எட்வின் நரேஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது.

01ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆயத்தநாள் வழி பாடுகள் ஆரம்பமாகி 02ஆம் திகதி நற்கருணைவிழா இடம் பெற்றது.

திருவிழாத் திருப்பலியை கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை றொனால்ட் அடிகளும், நற்கருணைவிழாத் திருப்பலியை சல்வற்றோறியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை நிர்மல் அடிகளும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## நாவற்குழி புனித அற்புத அன்னை ஆலயத்தில் முதியோர் தினக் கௌரவிப்பு நிகழ்வு



நாவற்குழி புனித அற்புத அன்னை ஆலயத்தில் முதல் தடவையாக முதியோர் தினக் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ஞானரூபன் அடிகள் தலைமையில் புனித வின்சன் டி போல் சபையின் அனுசரணையில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு, கௌரவிப்பு நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. இருபது முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## நெடுந்தீவு புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா



நெடுந்தீவு புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது.

கடந்த மாதம் 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த நிலையில் கடந்த 02ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை பலாலிப் பங்குத்தந்தை அருட்தந்தை எரோனியஸ் அடிகளும் நற்கருணை விழாத் திருப்பலியை அருட்தந்தை சோபன் றூபஸ் அடிகளும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## சிலாபம் மறைமாவட்டத்திற்குப் புதிய ஆயர்



சிலாபம் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக சிலாபம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை விமல் ஸ்ரீ ஜெயசூர்ய அடிகள் திருத்தந்தை அவர்களால் நியமனம் பெற்றுள்ளார்.

அருட்தந்தை அவர்கள் 1997 ஆம் ஆண்டு சிலாபம் மறைமாவட்டத்தில் மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத் தப்பட்டார். மறைமாவட்டத்தின் பல பங்குகளிலும் பணியாற்றி யதுடன் உரோம் ஊர்பானியாப் பல்கலைக்கழகத்தில் திருஅவைச் சட்டத்துறையில் கலாநிதிப் பட்டத்தைப்பெற்று மறைமாவட்ட நீதித் துறை ஆயர் பதில் குருவாகவும் மற்றும் அம்பிட்டிய தேசிய குருமடத்தில் 2013லிருந்து 2019வரை இறையியல் கற்கை நெறிப் பீடத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

## புனித அற்புத அன்னை மரியாயின் சேனையினரின் 5வது ஆண்டு விழா



நாவற்குழி புனித அற்புத அன்னை ஆலய மரியாயின் சேனையினரின் 5வது ஆண்டு நிறைவு விழா கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்திரு ஞானரூபன் அடிகள் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு, கலை நிகழ்வுகளும் இடம்பெற்று மதிய விருந்துடன் இந்நிகழ்வு நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய கருணை மாதா மரியாயின் சேனை யினரும் கலந்து சிறப்பித்தனர்.

## 59 ஆண்டுகளைக் காணும் திருமறைக்கலாமன்றம்



கலைப்பணியில் 59 ஆண்டுகளை நிறைவு செய்யும் திருமறைக் கலாமன்ற கலை நிறுவன தினம் கடந்த 03 ஆம் திகதி பல்வேறு நிகழ்வுகளுடன் யாழ்ப்பாணத்தில் சிறப் பிக்கப்பட்டது. யாழ். மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள கலை ஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும் தொடர்ந்து, யாழ். பிரதான வீதி மன்ற அலுவலகத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், கலைஞர் கௌரவிப்பு, திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து மரபு ஓராள் ஆற்றுகைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு என்பவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கிய "நொண்டி நாடகம்" தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெற்றது.

## மண் தினத்தில் தெல்லிப்பளையில் மரநடுகை



சர்வதேச மண்தினத்தை முன்னிட்டு யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவனமும் தெல்லிப்பளை பிரதேச சபையும் இணைந்து முன்னெடுத்த சிறப்பு நிகழ்வு கடந்த 05ஆம் திகதி தெல்லிப்பளையில் நடைபெற்றது.

தெல்லிப்பளை பிரதேச சபைத் தவிசாளர் திரு. சுதர்சன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மரநடுகையும் கழிவகற்றல் முகா மைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் முன் பள்ளிச் சிறார்களுக்கான கழிவு சேகரிப்பு உப கரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண பிரதம செயலாளர் திரு சமன் பந்துல சேனா அவர்கள் பிரதம விருந்தினராகவும் வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு. ஜகு மற்றும் உள்ளூராட்சி மாகாணச் செயலாளர் திரு. பிரணவநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

## சம்பியனானது யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட காற்பந்தாட்டச்சுற்று இறுதிப்போட்டி கடந்த 04ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றிய புனித பத்திரிசியார் கல்லூரி அணி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வெற்றிகொண்டு சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு மார்கழி மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.